Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Virtue in Silappathikaram

**Dr. M. Syed Kasim,** Assistant Professor, Department of Tamil,
Caussanel College of Arts and Science, Ramanathapuram, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-8001-9753**
**DOI: 10.5281/zenodo.6620768**

## Abstract

*The article entitled "Virtue in Silappathikaram" focuses on Silambu as one of the epic literature that has emerged to the heights following the principles of epic tradition of Tamil literary ethics. 'Pleasure comes from virtue'. Hence, Virtue plays a major role in the lead epic, being the base of virtue, substance, pleasure, and home, which can be a guarantee for great epics. That kind of virtue has been a kind of psychic healing among the Tamils from the very beginning. This article discusses how an epic is perceived, the high qualities of the epic regarding the virtues, the times that indicate good, the benefits of doing so, and the virtues conveyed in Silappathikaram.*

**Keywords:** *Silappathikaram*, Charity, Culture, Literature, Virtue.

## References

[1] Mariswari.p, *Thirukkural* , Parimalajagar text, Sharda Publishing, GT Shanthi Layer-3, Sri Krishnapuram Street, Raiyapet, Chennai-14, 2010.
[2] Manikkavasagan. G, *Silappathikaram Thelivurai*, Uma Publishing, 18, Coral Street, Mannadi , Chennai-600001, 2010.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சிலப்பதிகாரத்தில் அறச்சிந்தனை

**முனைவர் ம. செய்யத் காசிம்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-8001-9753**
**DOI:**

**ஆய்வுச்சுருக்கம்**

*அறத்தால் வருவதே இன்பம்' என்ற வள்ளுவத்திணைப் பின்பற்றி தோன்றிய இலக்கியங்களுள் சிலம்பும் ஒன்றாகும். ஐம்பெரும் காப்பியங்களுக்கு உறுதிப் பொருள் களாக இருக்கக் கூடிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நிலையினை தலையாக இருக்கக்கூடிய அறமானது தலைமைக் காப்பியத்தில் பெரும் பங்கினைக் கொண்டுள்ளது. அவ்வகை அறமனது ஆரம்ப காலத்தில் இருந்தே தமிழரிடையே ஒருவகை குணமாக அமைந்திருக்கின்றது. இத்தகைய இக்காப்பியத்தில் எவ்வகையில் உணர்த்தப்படுகின்றது, காப்பிய ஆசிரியரின் உயர் பண்புகள் அத்தகைய அறத்தினை செய்ய காலங்கள், இதன்மூலம் செய்வதினால் ஏற்படும் பயன்கள் மற்றும் காப்பிய மாந்தர்களின் வழி உணர்த்தப்படும் அறம் என்ற பல்வேறு நோக்கில் சிலப்பதிகாரத்தின் மூலம் அறத்தின் மாண்புகளை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** சிலப்பதிகாரம், தொண்டு, பண்பாடு, இலக்கியம், அறம்.

**முன்னுரை**

'அறத்தான் வருவதே இன்பம்' என வள்ளுவத் தினைப் பின்பற்றி தோன்றிய இலக்கியங்களில் சிலம்பும் ஒன்றாகும். புலவர்கள், மக்களின் வாழ்வு, பொருள் பொதிந்ததாய் அமைய இலக்கியங்கள் வழி அறநெறியின் பாற்பட்ட கருத்துக்களை சமுதாயத்திற்கு அளித்து வருகின்றனர் எவை நல்லவை, எவை தீயவை என்பதை உணர்த்தி தீயனவற்றை களைதல் பொருட்டு உண்மை செய்திகளோடு கற்பனை வளத்தை கலந்து இலக்கியத்தின் வாயிலாக அறிவுறுத்தும் பணியை நெறியாக கொள்கின்றனர். அவ்வழியில் கிபி இரண்டாம் நூற்றாண்டினதாக எண்ணப்படும் நெஞ்சை அள்ளும் சிலம்பு படைத்த இளங்கோவடிகள் துறவி என்றாலும், அறம் கூறும் மன்னனாக காட்சியளிக்கின்றார் சிலம்பு முதல் வரலாற்று காப்பியமாக தமிழகம் கொண்டாடும் பெருமை உடையது. தமிழரின் பண்பாடுகளை தெளிவாக காட்டக்கூடிய நூல் இச்சிலப்பதிகாரம் ஆகும்.

**உயர் பண்பின் விளக்கம்**

பண்பு என்ற சொல் குணம் என்ற சொல்லிற்கு பொருளாக கொள்ளப்படுகிறது. ஒன்றின் இயல்பு அல்லது அதன் தன்மையை பற்றி கூறப்படுவது பண்பு எனலாம். சீர்மை, மேன்மை, நல்லொழுக்கம் போன்ற பொருள்கள் உயர் பண்பைக் குறிப்பனவாகும். ஒருவரின் பண்புநலன் தான் கொண்டிருக்கும் அறிவாலும், தான் சார்ந்திருக்கும் இனத்தாலும் நற்பண்பாகவோ தீயபண்பாகவோ வேறுபடலாம். இதனை,

**"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு" (குறள்:994)**

என்று வள்ளுவர், சான்றோரின் உயர் பண்புகள் உலகப் போற்றுதற்குரியது என்கிறார். நீதியோடு, பிறருக்கு நன்மை செய்தல், பகைவரிடத்தும் பண்புடையவராக இருத்தல், யாவர் மாட்டும் அன்போடிருத்தல் பிறர் துன்பம் உணர்ந்து செயல்படுதல் போன்ற செயல்கள் ஒரு மனிதனை உயர் பண்பாளனாக்கும் என வள்ளுவர் கூறுகிறார். ஒரு மனிதன் உயர் பண்புகள் எனக் கருதப்படும் அனைத்து குணங்களையும் ஒரு சேரப்பெற்றிருத்தல் அரிது. இயன்றவரைப் பிறருக்கு உதவி செய்தல், தன்னால் பிற உயிருக்கு கேடு வராதிருத்தல் போன்ற உள்ளம் கொண்டவனாயிருத்தல் நன்று. அறம் இல்லாமல் இன்பம் உண்டாகாது. ஆதலால், மனிதன் அறத்தில் பற்றுடையவனாக இருக்க வேண்டும்.

**சிலம்பு உணர்த்தும் அறம்**

சிலப்பதிகாரம் ஒரு சரியான சிறந்த ஒப்புயர்வற்ற இலக்கியமாக உலவுகின்றது. இன்னும் எதற்காக எழுதப்பட்டது என்பதனை இதன் பதிகத்தில் தெளிவாகக் காணலாம்.

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரணம் ஆக**
**சிலப்பதிகாரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் என"(சிலம்பு.பதிகம். 55-60)**

அரசியலிலே தவறு செய்து வரை அறமே எமனாக தோன்றி கொள்ளும், புகழ் பொருந்திய கற்புள்ள பெண்ணை உயர்ந்தோர் போற்றி கொண்டாடுவார்கள் முன்செய்த இருவினையும் செய்தவனை தேடி ஒரு கொண்டு வந்து தம் பலனைத்தரும் இம்மூன்றும் சிலம்பு காரணமாக விளைந்த ஆதலால் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் ஒரு காப்பியத்தை ஏற்றுவோம் என்கிறார் இளங்கோ இதனால் சிலப்பதிகாரம் எழுதப்பட்டதன் நோக்கம் இன்னது என்பதை காணலாம். அரசியல் பத்தினிப் பெண்டிர் பெருமை ஊழ்வினையின் விளைவு இவற்றைப் பற்றி மக்கள் உணரும்படி செய்வதே சிலப்பதிகாரத்தின் கருத்தாக அமைகிறது.

**இளங்கோவின் உயர் பண்புகள்**

சேரநாட்டின் இளவரசரான இளங்கோவடிகள் நிமித்திகனின் வாக்கால் அரச பதவியைத் துறந்து அண்ணனுக்குப் பதவியை உரிமையாக்கிய தகைமை சான்றவர். பெண்மையை பெருமைப்படுத்தி உயர்வளித்தவர். தான் கொண்டிருந்த ஒற்றுமை உணர்வால் தமிழ் நிலத்தை ஒன்றுபடுத்தி, அதில் வாழ்ந்த மக்களையும், மன்னரையும் அவர்களின் உணர்வுகளையும் ஒரு எல்லைக்குள் கொண்டு வந்தவர் இளங்கோ. மக்கள் அறத்தையும், அரசியல் அறத்தையும் போதித்தவர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கையை நிலைநிறுத்த அவாக் கொண்டு கற்பின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டிய பண்பாளர். அநீதியைச் செய்தவர் யாராயினும் தட்டிக்கேட்கும் உரிமை குடிமக்களுக்கு உண்டு என்ற விழிப்புணர்வினை ஊட்டியவர் இளங்கோஆவார். மண்ணாளும் ஆசை அற்றிருந்த அடிகள் சமுதாயத்தின் நீதி வாழ்வை நிலைநாட்ட எண்ணிய மன்னன் ஆவார். இளங்கோவின் நல்லெண்ணங்கள் சிலம்பின் வழி வெளிப்படுகின்றன,

**"குணவாயில் கோட்டத்து அரசு துறந்திருந்த**
**குடக்கோச் சேரல் இளங்கோவடிகள்"(சிலம்பு:பதிகம்.1-2)**

என்ற வரிகளின் மூலமாக இவரின் பெருமையை உணரலாம்.

**அறம் விளக்கம்**

பொதுவாக அறம் என்ற சொல்லுக்கு தானம், தருமம் என்று கூறுவார்கள். ஆனால் நல்ல செயல்கள் எல்லாமே அறமாகும் என்றும் கூறுவர். அறம் எனப்படுவது நாட்டு மக்களுக்கு உணவும், உடையும், உறைவிடமும் வழங்குதலே என்று மணிமேகலை எடுத்தியம்புகிறது. இதனை,

**"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இது கேள், மண்ணுயிர்க்கு எல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்" (மணி. ம. ப. காதை.228-231)**

என்ற வரிகளால் அறியலாம்.

இதிலிருந்து நற்செயல்கள் எதுவாக இருந்தாலும் அத்தனையும் அறமாக கருதப்படும் என்பது தெளிவாகிறது.

**அறம் செய்ய காலம்**

அறச் செயல்களைச் செய்வதற்கு காலம் தாழ்த்தக் கூடாது. அத்தகைய செயல்களை அன்றே செய்ய வேண்டும். வலக்கையால் செய்யும் தானம் இடக்கைக்குத் தெரிதல் கூடாது. ஏனெனில் வலக்கையிலிருந்து, இடக்கைக்கு மாறும் நேரத்தில் மனம் மாறக்கூடும் என்பது அதன் நோக்கமாகும். இதனை,

**"நாளை செய்வோம் அறம் எனின் இன்றே**
**கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்**
**இது என வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்**
**முதுநீர் உலகின் முழுவதும் இல்லை" (சிலம்பு. நாடுகான்கதை.179-182)**

என்ற சிலப்பதிகார வரிகளால் அறியலாம். நல்லவற்றை செய்வதற்கு எண்ணம் தோன்றி விட்டால் அதனை உடனே நிறைவேற்றிட வேண்டும். காலத்தை வரையறுத்து வாழ்பவர்கள் உலகில் யாரும் இல்லை. அறச்செயல்களை நாளைச் செய்வோம் என்றால் இன்றே உயிர் போனாலும் போகும். ஆகையால் உடனே செய்ய வேண்டும் எத்தகைய அறமானாலும் காலம் தாழ்த்தாது உடனே நிறைவேற்றுவது நம் கடமையென ஏற்றுக் கொள்வதாக அமைகிறது. ஏனெனில் உயிர் போய்விட்டால் அத்தகைய பாக்கியம் அற்றவர்களாகவும் அமையலாம். அறஞ்செய்தலின் நோக்கத்தினை மணிமேகலையும்,

**"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான் பெரும் செல்வமும் நில்லா**
**புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை யாவது தானஞ்செய்" (மணி.சி. செ. காதை.135-140)**

இவ்வுலகத்தில் எதுவுமே நிலையில்லாதது. தான் செய்கின்ற அறம்தான் இறுதிவரை இருக்கும் என்று அறத்தின் மாட்சியினையும் வலியுறுத்துகின்றது.

**அறத்தின் பயன்**

ஒருவரின் நல்லற பயனானது அவருக்கு மட்டுமல்லாது அவரைச் சேர்ந்தவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். நல்வினை, தீவினை இருவகைகளில் எதனைச் செய்தாலும் அதற்குரிய பலன் வந்தே தீரும் என்பது உலக நியதி. அறங்கள் செய்தால் நற்பலன் உண்டாகும் அல்லவை செய்தார்க்கு அறமே கூற்றாகும் என்பதை,

**"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்ககின்னா**
**பிற்பகல் தாமே வரும்"(குறள்.319)**

ஒருவன் இழைக்கும் தீமையானது அவனுக்கே மீண்டும் வந்து சேரும் என்பது வள்ளுவர் கூற்று. இதனையே இளங்கோவடிகள், **"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு/பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண" (சிலம்பு. வஞ்சினமாலை,3-4)** என வரும் அடிகள் மூலம் மொழிகிறார். அறம் செய்தார்க்கு அறமே பயன் என்றும், தீமை செய்தவர்க்கு தீமையே பயனாகும் என்று இவ்விருவரின் கருத்திற்கும், திணை விதைத்தவன் திணை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற கூற்றிற்கு மெய்யாக அமைகிறது.

**கவுந்தியின் அறம்**

புகார்க் காண்டத்தில் நாடுகாண் காதையில் கவுந்தியடிகள் அறிமுகப்படுத்தப் படுகிறார். கோவலனும், கண்ணகியும் செல்லும் வழியில் இருந்த கவுந்தியடிகள் எழுந்தருளியிருந்த பள்ளியகத்துக்குச் சென்று சென்று கண்ட கோவலன் அவர் அடிகளைப் பணிந்து வணங்கினான். அருகதேவனை வழிபடும் கவுந்தியடிகள் கோவலனை நோக்கி நீங்கள் நடந்து வருவதற்கு என்ன காரணம் என்று வினவி, கண்ணகியைப் பார்த்து இவள் இளம் பாதங்கள் காடு, கற்கள், பள்ளங்கள் நிறைந்த பகுதியில் எப்படி தாங்கும்? ஆகையால் இவளுடன் செல்லும் எண்ணத்தினை நீ கை விடுவாய் என்றவுடன், அதற்கு இவ்விருவரும் உடன்படாமல் போய்விடுகின்றனர். பின்னர் நீங்கள் செல்லும் மதுரைக்கு நானும் வருகிறேன் என்று புறப்படுகிறார். கவுந்தியடிகள் பெரும் துறவியாக இருப்பினும் தன் நிலையில் கௌரவம் செய்யாது உடன் செல்லல் அவருடைய பெருந்தன்மையையும் அன்பையும் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

அக்காலம் தொட்டு இக்காலம் வரை பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவைகள் யாவும் மனிதனிடம் அறம் குன்றி மறம் தோன்றிய நிலையில் உலகில் மக்களுக்கு அறத்தினையும், அதன் சார்ந்த பண்பு நலன்களையும் எடுத்துரைக்க அரசர்கள், புலவர்கள் இலக்கியம் படைக்க தூண்டுவார்கள் இத்தகைய சூழ்நிலையில் அரசர்களின் வேண்டுகோளுக்கு இணக்க மில்லாமல் தமிழர்க்கே உரித்தான அறக்காப்பியம் படைத்த இளங்கோ அவர்களின் சிலப்பதிகாரம் ஒப்புயர்வற்ற காப்பியமாகத் திகழ்கிறது. எத்தனை காலங்கள் மாறினாலும் சிலப்பதிகாரத்தின் சுவை மட்டும் மாறாமல் அதன் அகத்தினை வலியுறுத்திய நிலையினை இக்காப்பியத்தில் காரணலாகிறது.

**பார்வை நூல்கள்**

[1] மாரீஸ்வரி.பா. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை-14. 2010.
[2] மாணிக்கவாசகன்.ஞா. சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை -600001, 2010.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.